**நீங்களும் குடிசன மதிப்பீடும்**

**ஒரு குடிசன மதிப்பீடு என்றால் என்ன?**

கனடாவில் ஐந்து வருடங்களுக்கொரு முறை குடிசன மதிப்பீடு மேற்கொள்ளப்படுகின்றது. அடுத்த குடிசன மதிப்பீடு 2016 ஆம் ஆண்டு மே மாதத்தில் இடம்பெறும். இந்தக் குடிசன மதிப்பீடு நாட்டினதும், நாட்டு மக்களினதும் விபரங்கள் பற்றிய தெளிவான ஒரு விளக்கத்தைத் தரும்.

கனடாவில் வாழுகின்ற அனைவரும் குடிசன மதிப்பீட்டில் பங்கெடுப்பது கட்டாயக் கடமையாகும். கனடிய பிரஜைகள், வேறு நாடுகளிலிருந்து குடிபெயர்ந்து வந்தவர்கள், அகதி அந்தஸ்து கோருபவர்கள் மற்றும் வேலைக்கான அல்லது கற்கைக்கான அனுமதிப்பத்திரங்களை வைத்திருப்பவர்கள் ஆகியோர் இந்தக் குடிசன மதிப்பீட்டில் உள்ளடக்கப்படுவார்கள்.

**குடிசன மதிப்பீடு எவ்வாறு மேற்கொள்ளப்படுகின்றது?**
ஒவ்வொரு குடும்பத்திற்கும் 2016 ஆம் ஆண்டு மே மாத ஆரம்பத்தில் குடிசன மதிப்பீடு பற்றிய அறிவுறுத்தல்கள் அனுப்பிவைக்கப்படும். அந்த நேரத்தில், குடினசன மதிப்பீடு தொடர்பான வினாக்களுக்கான பதில்களை ஒன்லைனில் அல்லது ஆவணப் படிவத்தில் பூரணப்படுத்த வேண்டுமா என்பதை உங்களால் தீர்மானித்துக்கொள்ள முடியும்.

**நான் வழங்கும் தகவல்களுக்கு என்ன நிகழும்?**
நீங்கள் வழங்கும் விபரங்கள் *புள்ளிவிபரவியல் சட்டத்திற்கு* இணங்க இரகசியமாகப் பாதுகாக்கப்படும். நீங்கள் வழங்கும் தகவல்களை கனடாவின் குடிசன மதிப்பீட்டுப் பிரிவு ஏனைய மதிப்பாய்வுகள் அல்லது பகுப்பாய்வு முதலியவற்றின் நிமித்தம் பயன்படுத்தலாம். உங்களின் விபரங்களை கனடாவின் புள்ளிவிபரவியல் பிரிவு தவிர்ந்த ஏனைய எந்தவொரு தனி நபராலும் பார்க்க முடியாது.

**குடிசன மதிப்பீடு பற்றிய வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டியவர் யார்?**
கனடாவில் வாழுகின்ற குடும்பங்கள் அனைத்தும் குடிசன மதிப்பீடு தொடர்பான வினாக்களைப் பூர்த்திசெய்வது கட்டாயக் கடமையாகும். குடிசன மதிப்பீடு தொடர்பான வினாக்களுக்கான பதில்களில் உள்ளடக்கப்பட்டுள்ள நபர்கள் பற்றிய விபரங்களை குடிசன மதிப்பீட்டுப் பிரிவின் இணையத்தளத்திலும், கட்டம் 'B இல் உள்ளடக்குவதற்கான நபர்' பற்றிய பிரிவிலுள்ள வினாக்கள் அடங்கிய ஆவணத்திலும் பார்க்கலாம்.

உங்களது குடும்பத்திலுள்ள நபர் (கள்) குடிசன மதிப்பீடு தொடர்பான வினாக்கள் அடங்கிய படிவத்தைப் பூரணப்படுத்த கூடாது என நினைத்தால் 2016 ஆம் ஆண்டு மே மாதம் 02 ஆம் திகதியிலிருந்து 1-855-700-2016 என்ற குடிசன மதிப்பீட்டிற்கு உதவும் தொலைபேசி மார்க்கத்துடன் தொடர்புகொண்டு உதவியைப் பெற்றுக்கொள்ளலாம்.

… 2

**எனது பதில்கள் எவ்வாறு பயன்படும்?**
குடிசன மதிப்பீடு தொடர்பான வினாக்களுக்கு நீங்கள் அளிக்கும் பதில்கள் புள்ளிவிபரங்களைத் தொகுத்து வழங்கும் நிமித்தம், கனடாவில் வாழுகின்ற ஒவ்வொருவரினதும் பதில்களுடன் சேர்க்கப்படும். உங்களது பதில்கள் பகலில் பிள்ளை பராமரிக்கும் நிலையங்கள், பாடசாலைகள், சுகாதாரப் பராமரிப்பு, மொழி வகுப்புகள், போலீஸ், தீயணைப்பு, சிரேஷ்ட பிரஜைகளுக்கான இல்லங்கள் என்பன போன்ற சேவைகளை மக்கள் திட்டமிட்டுக்கொள்வதற்கு உதவும்.

**குடிசன மதிப்பீட்டில் நான் ஏன் பங்கெடுக்க வேண்டும்?**
நீங்களும், உங்களது குடும்பமும், உங்களுடைய சமூகமும் இந்தக் குடிசன மதிப்பீட்டிலிருந்து நன்மை அடையலாம். நீங்கள் குடிசன மதிப்பீட்டில் பங்கெடுக்கின்றீர்கள் என்றால் உங்களுடைய சமூகத்திற்கு சிறந்த தகவல்கள் கிடைக்கின்றன என்பதை அது அர்த்தப்படுத்தும்.

குடிசன மதிப்பீடு தொடர்பான வினாக்களில் கேட்கப்படும் கேள்விகளுக்கு நீங்கள் பதிலளிப்பது கட்டாயம் எனபதை கனடாவிலுள்ள சட்டமும் குறிப்பிடுகின்றது. *புள்ளிவிபரவியல்* தொடர்பான இந்தச் *சட்டமும்* குடிசன மதிப்பீடு தொடர்பான வினாக்களுக்கு நீங்கள் அளிக்கும் பதில்கள் இரகசியமான முறையில் பாதுகாப்படும் என்பதற்கு உத்தரவாதமளிக்கின்றது.

**நாங்கள் உங்களில் தங்கியிருக்கின்றோம்!**
குடிசன மதிப்பீடு தொடர்பான வினாக்களைப் பூர்த்தி செய்வது என்பது பொதுவான கடமையும் மற்றும் கனடாவில் வாழுகின்ற அனைவரினதும் சட்டமுறையான தேவைப்பாடும் ஆகும். குடிசன மதிப்பீடு தொடர்பான வினாக்களுக்கு நீங்கள் பதிலளிக்கும் போது 350 ஆண்டுகள் பழமை வாய்ந்த அதாவது 1666 இல் உள்ள சில முன்னைய கிராமங்களிலிருந்து இன்றுள்ள பெரும், வளமான நாட்டிற்கு நகரும்  ஒரு பாரம்பரியத்தைத் தொடர்ந்து செல்வீர்கள்.

**எனக்கு உதவி அவசியம் என்றால் என்ன செய்ய வேண்டும்?**

- குடிசன மதிப்பீடு தொடர்பான வினாக்களுக்குப் பதிலளிப்பதற்கு அல்லது குடிசன மதிப்பீடு பற்றிய விபரங்களைப் பெறுவதற்கு அவசியமாயின்
- உங்களுடைய குடும்பத்திலுள்ள எவரேனும் ஒருவர் குடிசன மதிப்பீடு தொடர்பான தனியான ஒரு ஆவணப் படிவத்தைப் பூர்த்திசெய்ய விரும்பினால்
- உங்களது குடும்பத்திற்கு குடிசன மதிப்பீடு தொடர்பான வினாக்கள் அடங்கிய ஒன்றுக்கு மேற்பட்ட ஆவணப் படிவங்கள் தேவையாயின்
- உங்களுக்கு குடிசன மதிப்பீடு தொடர்பான வினாக்கள் அடங்கிய புதிய ஒரு ஆவணப் படிவம் அல்லது பிரஞ்சு மொழியில் அத்தகையதொரு ஆவணப் படிவம் தேவையாயின்
- குடிசன மதிப்பீடு தொடர்பான வினாக்கள் அடங்கிய ஆவணப் படிவத்தின் பிரதி ஆங்கிலம் அல்லது பிரஞ்சு மொழியில் இல்லாமல் வேறொரு மொழியில் தேவையாயின்

2016 ஆம் ஆண்டு மே மாதம் 02 ஆம் திகதியிலிருந்து 1-855-700-2016 என்ற குடிசன மதிப்பீட்டிற்கு உதவும் தொலைபேசி மார்க்கத்துடன் (CHL) திங்கள் முதல் வெள்ளி வரையான நாட்களில் மு.ப. 8.00 மணி முதல் பி.ப. 8.00 மணி வரையும் அல்லது சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் மு.ப. 8.30 மணி முதல் பி.ப. 4.30 மணி வரையிலும்  தொடர்புகொண்டு உதவியைப் பெற்றுக்கொள்ளலாம்.

சென்சஸ் ஹெல்ப் லைன்  என்பது ஒரு இலவச சேவை. இந்த சேவையை பல மொழிகளில் பெற்றுக்கொள்ளலாம்.